

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில், போக்குவரத்து துறை சார்பாக ரூ.4.90 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய 9 குளிர்சாதன பேருந்துகளையும், 1 சாதாரண பேருந்தினையும் பயன்பாட்டிற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் நடத்துனரிடம் பயணசீட்டுப் பெற்று பயணம் மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், திருவள்ளூர் நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு. ரவிச்சந்திரன், திருவள்ளூர் மண்டல போக்குவரத்துகழக பொது மேலாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

### மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் சென்னை மேற்கு மாவட்ட

# தி.மு.க. சுற்றுச்சூழல் அணி அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட தலைவர் லயன் மெய்.சண்முகம் வேண்டுகோள்!

சென்னை, ஜுலை 26

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் இன்று (26.07.2025) சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணைத் தலைவர் நே.திருமாறன் முன்னிலை வகிக்கிறார். மாவட்ட தலைவர் நான் (லயன் மெய்.சண்முகம்) அனைவரையும் வரவேற்று பேசுகிறேன். எனவே, அறிமுக ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி தலைவர் லயன் மெய்.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இராயபுரம் – திரு.வி.க.நகர் மண்டலங்களில்

# தூய்மைப் பணிகளுக்கான வாகனங்கள்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,ஜுலை.26-

பெருநகர சென்னை மாநகராட்சியின் இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலங்களில் தனியார் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்வதற்காக பேட்டரியால் இயங்கும் 40 மூன்று சக்கர வாகனங்கள் (BOV Vehicles) மற்றும் 12 சாலை பெருக்கும் இயந்திரங்கள் (E - Mechanical Sweeping Machines) ஆகியவற்றினை மேயர் திருமதி ஆர்.பிரியா ரிப்பன் கட்டட வளாகத்தில் நேற்று (25.07.2025) கொடியசைத்து பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.




இராயபுரம் மற்றும் திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உருவாகும் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு M/s. Chennai Enviro Solutions Private Limited (Package-6) தானியங்கி வாகனங்கள் மூலம் உரிய இடங்களுக்கு கொண்டு செல்லும் பணிகள் மேற்கொள்ளப்படும். மண்டலம் 5 மற்றும் 6 ஆகிய இரண்டு மண்டலங்களில் 38.92 சதுர கிலோமீட்டர் பரப்பளவு மற்றும் 637.50 கி.மீ. சாலைகள் மற்றும் 30 வார்டுகள் உள்ளன. இவற்றில் 4,21,926 வீடுகள் உள்ளன. நாள்தோறும் ஒரு நபருக்கு சராசரியாக 0.655 கிலோ திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது.

வீடுகளிலிருந்து பிரித்தே சேகரிக்கப்படும் திடக்கழிவுகளைச் சேகரித்தல், தெருக்கள், சாலைகள் மற்றும் நடைபாதை சுத்தம் செய்யும் பணிகள், சாலையோர சாக்கடை மற்றும் கால்வாய்களில் இருந்து வரும் படிமண் கழிவுகளை சேகரித்தல் மற்றும் கடத்தல், பேரிடர் கழிவுகள், தோட்டக்கழிவுகள், வீட்டு அபாயகர கழிவுகள் (DHW) ஆகியவற்றை சேகரித்தல் மற்றும் புறப்படுத்தல், கடற்கரை பகுதிகளை சுத்தம் செய்தல் மற்றும் குப்பை அகற்றும் பணிகள் உள்ளிட்ட தூய்மைப் பணிகள் இந்த இரண்டு மண்டலங்களில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மண்டலங்களில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, பேட்டரியால் இயங்கும் 1306 மூன்று சக்கர வாகனங்கள், தெருக்களை சுத்தம் செய்யும் 12 இயந்திர வாகனங்கள், 8 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 6 குப்பை நெறிப்படுத்தும் வாகனங்கள் (Refuse Compactors), 14 கியூபிக் மீட்டர் கொள்ளளவு கொண்ட 39 குப்பை நெறிப்படுத்தி வாகனங்கள், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பை நெறிப்படுத்தும் 4,005 குப்பைத் தொட்டிகள் (Refuse Compactor Bins), 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2,286 தெரு துடைப்பு குப்பைத் தொட்டிகள், குப்பைத் தொட்டிகளை கழுவும் 1,504 இயந்திரங்கள் (Bin Washers), தோட்டக்கழிவுகள் அகற்றும் 5 வாகனங்கள் (Horticultural Waste Removal Vehicles)), குப்பைத் தொட்டிகளை நகர்த்தும் 6 ஏந்தி இயந்திரங்கள் (Backhoe Loaders), பேருந்து சாலைகளுக்கான 1,036 குப்பைத் தொட்டிகள், 3 ஸ்கிட் ஸ்டியர் ஏந்திகள் (Skid Steer Loaders), சுத்தமாக்கப்பட்ட வழித்தட/பகுதிக்கான பேட்டரியால் இயங்கும் 6 வாகனங்கள் (Battery Operated Vehicles for Litter-Free Corridor/ Area), 39 நிலைத்த குப்பை நெறிப்படுத்திகள் (Static Compactors), ஹாட் ஸ்பாட் (Hotspot) பகுதிக்கான 2 பெரிய வாகனங்கள் (HMV), 2 சிறிய வாகனங்கள் (LMV), திடமாக்கப்பட்ட காலக் கழிவுகளுக்கான 6 சிறிய வாகனங்கள் (LMV for Carcass Waste), வீட்டு அபாயகர கழிவுகளுக்கான 27 வாகனங்கள் (Domestic Hazardous Waste-LMV), தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதிகளை சுத்தம் செய்யும் 5 LMV வாகனங்கள் மற்றும் 5 MUV வாகனங்கள் (Multi-Utility Vehicle), தோட்டக்கலை கழிவுகளுக்கான 6 LMV வாகனங்கள் மற்றும் முக்கிய சேவைகளுக்கான 5 LMV வாகனங்கள் இந்த மண்டலங்களில் தூய்மைப் பணிக்காக பயன்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் இந்த இரண்டு மண்டலங்களிலும் வசிக்கும் 16,87,703 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன் அடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வட்டார துணை ஆணையாளர்கள் கட்டா ரவி தேஜா, (வடக்கு), திரு.எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர்கள் பி.ஸ்ரீராமுலு (இராயபுரம்), திருமதி சரிதா மகேஷ்குமார் (திரு.வி.க.நகர்), Chennai Enviro நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் இஷான் அல்லா, துணைத் தலைவர் எஸ்.வெங்கடேசன், திட்டத் தலைவர் பரிசுத்தம் வேதமுத்து மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் வடக்கு பகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பாகம் 248, 275, வட்டம் 161–ல் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் தலைமையில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் அபுதாகிர், பாண்டியன், அலீம், சாகிர், சாரதா ஆகியோர் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### உடுமலை நாராயணன்
### ஜுலை 26 (1971)



கோவை மாவட்டக் கழகச் செயலாளராகவும், பொள்ளாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

கொங்கு நாட்டில் கழகத்தை கட்டி வளர்த்த சிறந்த செயல்வீரர். உடுமலை தேசிங்கு என்று நண்பர்களால் புகழ்ச்சியாக அழைக்கப்பட்ட முன்னணித் தோழரும் – கழகம் துவங்கிய காலம் முதல் கோவை மாவட்டக் கழக நிர்வாகத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவரும் கழகத் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் விளங்கியவர்.

“1967ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கோவை மாவட்டத்தை கழகத்தின் கோட்டையாக்கிய பெருமைக்குரியவர்” என தலைவர் கலைஞர் இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, மௌலிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், திவ்யா சத்தியநாதன், தி.க.பாஸ்கரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### கோல்டு பிரகாஷ் – சி.திலிப் ஏற்பாடு! என் சந்திரன் எம்.சி. – ப. குணாளன் பங்கேற்பு!

# மிஸ்டர் செங்கம் காஞ்சி ஆணழகன் மாவட்ட அளவிலான போட்டி - 2025!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்குகிறார்! ஆர்.எஸ் பாரதி தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜுலை.26

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டி மிஸ்டர் செங்கை காஞ்சி ஆணழகன் போட்டி 2025 - மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், போட்டி இயக்குநர் சி.திலிப் ஆகியோர் ஏற்பாட்டில் நாளை (27.07.2025 ஞாயிற்றுக்கிழமை) நேரு உயர்நிலைப் பள்ளி பழவந்தாங்கலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தொடங்கி வைக்கிறார். வெற்றி பெறுபவர்களுக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பரிசு வழங்கி சிறப்பிக்கிறார்.

இதில் உடல் எடை நேரம்: காலை 7.00 - மணி 9.00 மணி, Pre-Judegemnet: காலை 10.00 மணி இறுதிப்போட்டி மாலை 5 மணி - மொத்தம் 6 பிரிவுகள் : 55, 60, 65, 70, 75, 75+, Men Physics-2 பிரவுகள், Physically Challenged ஆகியவை நடைபெறுகிறது.

இதில் பகுதி செயலாளர்கள் என் சந்திரன் எம்.சி., ப. குணாளன், எம்.எஸ்.கே. இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், இரா.பாஸ்கரன், ஆர்.ஆர்.ஜெய்ராம் மார்த்தாண்டன், மு.சத்யா, ஏ.என்.லட்சுமிபதி, ஜி.சுந்தர்ராஜன், ஏ.சாலமோன் எம்.சி., ஆர். பாபு, கே.ராஜேஸ்வரி, இ.ரமேஷ், வே.டில்லிபாபு, கோ.கோடீஸ்வரன், எம். சையத் அபுதாஹிர், ஐ.அழகேசன், ஜெயசெல்வம், டி. ஜேசுதாஸ், கே.ஆர்.ஜெகதீஸ்வரன், இ.உலகநாதன், ஜெ.நடராஜன், கே.பி.முரளிகிருஷ்ணன், ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, ம. கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஆர்.சரவணா, ஏ.வேலவன், மாமன்ற உறுப்பினர்கள் ஜே.தேவி, என்.துர்காதேவி, ஜெ.பூங்கொடி, வி.பாரதி, பி.எம். பிருந்தாஸ்ரீ, எஸ்.ரேணுகா, எஸ்.அமுதபிரியா, விக்னேஷ் மணிகண்டன், சந்திரசேகர், விஜய்பாபு, சீனிவாசன், அஜித், ஜாகீர்உசேன், பா.ராஜேஷ், சொ.சஞ்சீவி, ப.சந்தோஷ், கதிரவன், டி.. ராஜி, எம்.யுவராஜ், மற்றும் மாவட்ட பிரிதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள். மகளிர் அணி நிர்வாகிகள், அனைத்து வட்டத்திற்குட்பட்ட கழகத்தின் மூத்த முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

### தி.மு.க. இளைஞர் அணி மண்டலம் 2 மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்,

# அமைப்பாளர், துணை அமைப்பாளர் ஆலோசனை கூட்டம்!

## மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் அறிவிப்பு!

சென்னை, ஜுலை 26-

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மண்டலம் 2-க்கு உட்பட்ட கழக மாவட்டங்கள் திருவள்ளூர் கிழக்கு, மேற்கு மத்திய ஆவடிமாநகரம் விழுப்புரம் வடக்கு தெற்கு மத்திய மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு தெற்கு கடலூர் கிழக்கு, மேற்கு, கடலூர் மாநகரம் ஆகிய மாவட்டங்களில் மாநகர ஒன்றிய நகர, பகுதி பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற மாவட்ட அமைப்பாளர்கள் மாவட்ட கழக செயலாளர் அவர்களை நேரில் சந்தித்து கூட்டத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை கூட்டத்திற்கு மாநகர ஒன்றிய நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் கலந்து கொள்ளும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்

1. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை,

2. சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் நூலகம்,

3. சட்டமன்றத் தொகுதியில் பாக இளைஞர் தேர்வு செய்து சமூக வலைதளப் பயிற்சி கூட்டம், கிளை வார்டுகளில் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவது, இளைஞர் அணி வளர்ச்சி பணி.

இவ்வாறு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஜெ.கருணாநிதி தலைமை! கே.ஏழுமலை - ராஜா அன்பழகன் முன்னிலை!

# தியாகராயர் நகர் மேற்கு - கிழக்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர்கள் ஆ.மணிரத்தினம் – க.மணிகண்டன் அறிக்கை!

சென்னை, ஜுலை 26-

தியாகராயர் நகர் மேற்கு மற்றும் கிழக்குப் பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் இன்று (26-07-2025 சனிக்கிழமை) மாலை 7 மணியளவில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையிலும், தியாகராயநகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் ஆகியோர் முன்னிலையிலும் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் பகுதி துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு பகுதி அமைப்பாளர்கள் ஆ.மணிரத்தினம் மற்றும் க.மணிகண்டன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய அடங்கிய மாடம்பாக்கம், ஆதனூர், காவனூர்,ஒரத்தூர் ஊராட்சி அடங்கிய பிஎல் ஏ 2, பிடிஏ, கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்ட ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை ஆய்வு பணி கலந்த ஆலோசனைக் கூட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்றது. பாகப் பொறுப்பாளர்கள் மூ.ராஜேந்திரன், ரா.தீபக், என். எஸ்.இளங்கோ கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவுறுத்தலின் பேரில் விச்சூர் ஊராட்சி பாகம் எண் 311 இல் பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் நா.செல்வசேகரனிடம் BLA2 தட்சணாமூர்த்தி மற்றும் BDA ஸ்டாலின் ஆகியோர் ஒப்படைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.